# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 01 | Issue: 253 | 4 Pages | 16.4.2024 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 253 | 4 பக்கங்கள் | 16.4.2024 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## இஸ்ரேலுக்கு யார் தீங்கு விளைவித்தாலும் அவர்களுக்கு தீங்கு விளைவிப்போம்: நேதன்யாகு ஆவேசம்



டெல் அவிவ், ஏப். 16

இஸ்ரேல்மீது ஈரான் தாக்குதல் நடத்தலாம் என தகவல் வெளியானநிலையில், தங்கள் நாட்டை நோக்கி ஈரான் ஏவுகணை, டிரோன்கள் ஏவியதாக இஸ்ரேல் குற்றம்சாட்டியது. 100க்கும் அதிகமான டிரோன்கள் ஈரானிலிருந்து ஏவப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்தது.


இந்நிலையில், ஈரான் தாக்குதல் குறித்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு கூறியதாவது:


ஈரானின் நேரடி தாக்குதலுக்கு பல ஆண்டாக இஸ்ரேல் தயாராகி வருகிறது. தற்காப்பு மற்றும் தாக்குதலுக்கு பதிலளிக்க நாடு தயாராக உள்ளது. இஸ்ரேல் அரசு பலமாக உள்ளது. ராணுவம் பலமாக உள்ளது. பொதுமக்கள் பலமாக உள்ளனர். இஸ்ரேலுக்குயார்தீங்குவிளைவித்தாலும்,நாங்கள்அவர்களுக்கு தீங்கு விளைவிப்போம். நாம் ஒரு தெளிவான கோட்பாட்டை வைத்துள்ளோம். யார்நமக்குத்தீங்கு விளைவித்தாலும்நாம்அவர்களுக்குத் தீங்கு செய்வோம். எந்தவொரு அச்சுறுத்தலுக்கும் எதிராக நம்மை தற்காத்துக்கொள்ள அதைத் தலைநிமிர்ந்து, உறுதியுடன் செய்வோம். இஸ்ரேல் குடிமக்களே, நீங்களும் சம நிலையில் உள்ளவர்கள் என்பதை நான் அறிவேன்.

ராணுவத்தின்கட்டளையின்வழிமுறைகளைப்பின்பற்றுமாறு உங்களை கேட்டுக் கொள்கிறேன். நாம் ஒன்றாக நிற்போம், கடவுளின் உதவியால், நம் எதிரிகள் அனைவரையும் வெல்வோம். இஸ்ரேலை ஆதரிப்பதற்காக அமெரிக்காவைப் பாராட்டுகிறேன் என்றார்.

இஸ்ரேல் மீதான தாக்குதலுக்கு இங்கிலாந்து, கனடா, ஜெர்மனி, பிரான்ஸ், ஐரோப்பிய ஒன்றியம், ஸ்பெயின், நெதர்லாந்து, நார்வே, செக் குடியரசு,பராகுவே,மெக்சிகோஆகியநாடுகள்கண்டனம்தெரிவித்துள்ளன.

## துருக்கியில் 23 மணி நேரம் தொங்கும் கேபிள் காரில் தத்தளித்த சுற்றுலா பயணிகள்





துருக்கி, ஏப். 16

துருக்கியின் அன்டலியா நகரில் உள்ள மலையில் கேபிள் கார் வசதி உள்ளது. இங்கு ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து கேபிள் கார்களில் செல்வார்கள். 2,010அடி உயர மலை உச்சியில் உள்ள உணவகம் மற்றும் சுற்றுலாதலத்திற்குகொன்யால்டிகடற்கரையிலிருந்துசுற்றுலாப்பயணிகள் கேபிள் கார்கள் மூலம் அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.

இந்த நிலையில் நேற்று கேபிள் கார் ஒன்று அறுந்து விழுந்து பாறை மீது மோதியதில் ஒருவர் பலியானார். 7 பேர் காயம் அடைந்தனர். இந்த விபத்தால் கேபிள் கார்களை இயக்க முடியவில்லை. இதனால் மலைக்கு மேல்கேபிள்கார்களில்174பேர்சிக்கித்தவித்தனர்.அவர்களைமீட்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதில் மீட்புக்குழுவினர் 600 பேர் மற்றும் 10 ஹெலிகாப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டன. இரவு முழுவதும் மீட்புப்பணி நடந்தது. சுமார் 23 மணி நேரத்துக்கு பிறகு சுற்றுலா பயணிகள் அனைவரும் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

## மனிதர்கள் மிமிக்ரி செய்வது போல பறவைகளும் சைரன் ஒலி சத்தம்



இங்கிலாந்த், ஏப். 16

மனிதர்கள் மிமிக்ரி செய்வது போல பறவைகளும் சைரன் ஒலி சத்தம் எழுப்பிய வீடியோ எக்ஸ் தளத்தில் வெளியாகி உள்ளது. இங்கிலாந்தில் உள்ள தேம்ஸ் பள்ளத்தாக்கு பகுதியில் கார்கள் பழுதடைந்தது போன்று சப்தம் கேட்டது. உடனே போலீசார் அங்கு சென்ற போது சாலையில் எந்த வாகனங்களும் இல்லை.

சிறிது நேரத்தில் அதே சாலையில் சைரன் ஒலியுடன் வாகனம் செல்வது போன்று சத்தம் கேட்டது. அப்போது போலீசார் சுற்றிலும் பார்த்த போது அங்குள்ள மரத்தில் பறவைகள் சைரன் ஒலி சத்தம் எழுப்பியது தெரிய வந்தது.

ஸ்டார்லிங் என்று அடையாளம் காணப்பட்ட பறவைகள் எந்திரங்களின் ஒலிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் போன்ற விஷயங்களை பின்பற்றுவது இதன் சிறப்பாக உள்ளது. இந்த ஒலி சத்தத்தால் போலீசார் குழப்பம் அடைந்தனர். இதுதொடர்பான வீடியோக்கள் வலைதளங்களில் வைரலான நிலையில், பயனர்கள் பலரும் கேலியான கருத்துக்களை பதிவிட்டு வருகின்றனர்.

# வடசென்னை வேட்பாளரை ஆதரித்து இன்று திறந்த வேனில் மு.க.ஸ்டாலின் தீவிர வாக்கு சேகரிப்பு

சென்னை, ஏப். 16

தமிழகத்தில் பாராளுமன்ற தேர்தல் ஒரே கட்டமாக வரும் வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது. தேர்தலுக்கான பிரசாரம் இறுதி கட்டத்தை எட்டியுள்ள நிலையில் பிரசாரம் செய்வதற்கு இன்னும் 2 நாட்களே உள்ளது. இதனால் அரசியல் கட்சி தலைவர்கள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன்படி, தி.மு.க. வேட்பாளர்கள் மற்றும் அதன் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தி.மு.க. தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

இந்நிலையில், தனது சொந்த சட்டமன்ற தொகுதியான கொளத்தூரில் இன்று காலை 7 மணிக்கு திறந்த வேனில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்பிரசாரம் செய்கிறார்.

கொளத்தூர் தொகுதிக்கு உட்பட்ட



32 தெருக்களில் பிரசாரம் மேற்கொள்ளும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஜி.கே.எம்.காலனியில் திறந்தவேனில் பிரசாரம் செய்வார் என்று அமைச்சர் சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

வடசென்னை தொகுதி தி.மு.க. வேட்பாளர் கலாநிதி வீராசாமிக்கு ஆதரவாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாக்கு சேகரிக்கிறார்.

## மக்களுடன் ஒன்றாத அரசாக மத்திய பா.ஜ.க., அரசு மாறி விட்டது கமல்ஹாசன் பேச்சு

திருப்பூர், ஏப். 16

திருப்பூர் பாராளுமன்ற தொகுதியில்தி.மு.க. கூட்டணிசார்பில்போட்டியிடும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியை சேர்ந்த சுப்பராயனை ஆதரித்து மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் கமல்ஹாசன் பிரசாரத்தில் ஈடுபட்டார். அப்போது அவர் பேசியதாவது:

நாட்டை காக்கும் தருணம் என்பதால்பரப்புரைக்குநான்வந்துள்ளேன். தனக்கான தேவைகளை மட்டும் பூர்த்தி செய்யாமல் உலகளாவிய உடை தேவைகளை பூர்த்தி செய்யும் நகரம் இந்த திருப்பூர். திருப்பூரில் பனியன் தொழில் மந்தமாக உள்ளது. இதற்கு மத்திய அரசின் ஜி.எஸ்.டி., பெட்ரோல் விலை உயர்வு காரணம். இப்போது மந்தமாக உள்ள போதே ரூ.40 ஆயிரம் கோடி வர்த்தகம் என்றால் 10 ஆண்டுகளுக்கு முன் எப்படி இருந்திருக்கும். அதிக வருவாய் ஈட்டித்தரும் திருப்பூரை ஒழுங்காக கவனிக்க முடியவில்லை. இதில் 75 புதிய நகரத்தை பிரதமர் எப்படி உருவாக்குவார்.

மக்கள் நலனை குறிக்கோளாய் கொண்டது 2 தத்துவங்கள். செய்ததை சொல்லி கொண்டு வருபவரை நம்பலாம். செய்யாததை சொல்வதும், செய்வதாய் பொய் சொல்வதுமாய் வருபவரை நம்ப கூடாது.



கலைஞர் சொல்வதை செய்பவர். திருப்பூர் மாநகராட்சியாக மாறுவதற்கு கலைஞர் முக்கிய காரணம். நிறைய பாலங்கள் சாலைகள் கொடுத்துள்ளார். மத்திய அரசு உதவியை தடை செய்தால் தொகுதியில் வேலை தடைபடும். ஒரு எம்.பிக்கு ரூ.5 கோடி கொடுப்பார்கள். இங்கு 6 சட்டமன்ற தொகுதி. 6 தொகுதிக்கு ஒரு கோடி கிடையாது. மக்களுக்கான வளர்ச்சி பணிகளை செய்வதற்கு கூட ஜி.எஸ்.டி வரி போட்டது தான் ஒன்றிய அரசு.

ஜி.எஸ்.டி. போடும் போது சினிமா துறையில் இருந்து நான் குரல் கொடுத்தேன்.

ஜி.எஸ்.டி. நல்ல திட்டம் என்றால் அந்த வரிதிட்டத்தை சொல்லி பாரதிய ஜனதாவினர் ஓட்டு கேட்டிருக்கலாம். ஜி.எஸ்.டி., வேண்டாம் என முழங்கியவர்களில் நானும் ஒருவன். ஜி.எஸ்.டி., மற்றும் பணமதிப்பிழப்பு உள்ளிட்ட மத்திய அரசின் இரட்டை தாக்குதலால் கடந்த 10 ஆண்டுகளாக திருப்பூர் பனியன் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது.

பஞ்சு விலை உயர்வு, நூல் தட்டுப்பாடு உள்ளிட்ட காரணங்களால் உலக அளவில் முதல் இடத்தை நெருங்கி கொண்டிருந்த இந்தியாவை பின்னால் தள்ளியது பங்களாதேஷ். அங்கு வரி குறைவு. பங்களாதேசில் இருந்து நூல் துணியை இறக்குமதி செய்கின்றனர்.

இந்த உதாரணம் போதும். ஒன்றிய அரசு என சொன்னாலும் மக்களுடன் ஒன்றாத அரசாக மத்திய பா.ஜ.க. அரசு மாறி விட்டது. எனக்கென்று எதிர்பார்ப்பு இல்லாமல் நமக்காக வந்திருக்கிறேன். நாட்டைக்காக்கவே இந்தியா கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

பிரசாரத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், செல்வராஜ் எம்.எல்.ஏ., மாநகராட்சி மேயர் தினேஷ்குமார் மற்றும் கூட்டணி கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## தலித் விடுதலை இயக்கம் சார்பில் நடைபெறவுள்ள 18வது மக்களவை தேர்தல் குறித்து விருதுநகரில் நடந்த அமைப்பின் மாநில ஆலோசனைக் கூட்டம்

விருதுநகர், ஏப். 16

கடந்த 03 ஆண்டுகள் திமுக ஆட்சியில் சட்டமன்ற தேர்தல் வாக்குறுதிகளான கல்விக்கடன் இரத்து, நீட் தேர்வு விலக்கு, புதிய கல்விக் கொள்கை இரத்து போன்ற மக்களின் அடிப்படை பிரச்சனைகளில் ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசின் தொடர் மெத்தனத்தைக் கண்டித்தும், பஞ்சமி நில மீட்பு, பட்டியலின மக்களின் மயானம் இல்லாத அவலம், மயானத்திற்கான அடிப்படை வசதிகள், மயானப்பாதை இல்லாத அவலம்,,தமிழகத்தில்தொடர்ந்து நடைபெற்றுவரும் சாதி ஆணவக் கொலைகளை தடுக்க "தனி சிறப்புச் சட்டம் இயற்றாத அவலமும், அரசின் மெத்தனத்தை கண்டித்து



நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளுக்கு நிபந்தனையற்ற ஆதரவை மதுரையில் அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் பொதுச் செயலாளர் எடப்பாடி கே. பழனிச்சாமி நேரில் சந்தித்து அமைப்பின் மாநிலத் தலைவர் ச.கருப்பையா தலைமையில் ஆதரவு தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில், மாநில இணைப் பொதுச் செயலாளர் தலித் கதிர்காமான், மாநில மகளிரணி செயலாளர் சசிகலா, மாநில இளைஞரணி செயலாளர் பீமாராவ், மதுரை மாவட்ட அமைப்புச் செயலாளர் ஹரீஸ் அரசு, தேனி மாவட்ட அமைப்பாளர் சவுந்தர், கரூர் மாவட்ட செயலாளர் இராமகிருஷ்ணன், திருப்பூர் மாவட்டத் தலைவர் மாரிமுத்து, ஈரோடுமாவட்டசெயலாளர் சசிகுமார், சேலம்மாவட்ட தலைவர் மணிகண்டன், மாவட்ட செயலாளர்இளையராஜா, கிருஷ்ணகிரி மாவட்ட செயலாளர் வெங்கடாச்சலம் மற்றும் இயக்கத்தின் முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

## கல்லூரியில் புதிய வாக்காளர் விழிப்புணர்வு கருத்தரங்கு & உறுதிமொழியேற்பு

விக்கிரவாண்டி, ஏப். 16

விக்கிரவாண்டி வட்டம், ஒரத்தூர் கூட்டுரோட்டிலுள்ள சுவாமி விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் புதிய வாக்காளராக உள்ள மாணவ, மாணவியர்களிடையே விழிப்புணர்வு கருத்தரங்கு மற்றும் உறுதிமொழியேற்பு நிகழ்ச்சி கல்லூரி முதல்வர் முனைவர். A. கெஜலட்சுமி தலைமையில் நடந்தது. இதன் ஏற்பாட்டாளராகவும், கருத்துரையாளராகவும், முட்டத்தூர், ஒய்க்காப் மேனிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியரும் , விழுப்புரம் ஜூனியர்



ரெட் கிராஸ் மாவட்டக் கன்வீனர் முனைவர். ம.. பாபு செல்வதுரை கலந்துக்கொண்டு கருத்துரையாற்றினார். அவ்வமையம் புதிய வாக்காளராக உள்ள நீங்கள் நேர்மையுடன். வாக்களிக்க வேண்டும். அதேபோல் தாம் வசிக்கும் பகுதியிலுள்ளவர்கள் வாக்களிக்க எடுத்துரைக்க வேண்டும். நம் பகுதியிலுள்ள முதியோர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு வாக்கு மையத்திற்கு வருவதற்கு உதவிட வேண்டும். எல்லோரிடமும் நல் மதிப்பை பெறும் வகையில் நேர்மையுடன் உங்களின் ஜனநாய கடமையினை செய்திட வேண்டும் என்று கூறினார்.

இறுதியாக முனைவர். ம. பாபு செல்வதுரை அவர்கள் தேர்தல் விழிப்புணர்வு உறுதிமொழி சொல்ல பேராசியர்கள்,

# வாட்ஸ்அப் மூலம் டிக்கெட் எடுக்கும் வசதி தற்காலிகமாக செயல்படவில்லை: சென்னை மெட்ரோ அறிவிப்பு




சென்னை, ஏப். 16

சென்னை மெட்ரோ ரெயிலில் பயணம் செய்ய கவுண்டரில் நீண்ட வரிசையில் நின்று டிக்கெட் எடுப்பதை தவிர்க்கும் வகையில் மெட்ரோ ரெயில் நிர்வாகம் பயணிகள் டிக்கெட்டுகள் பெற பல்வேறு ஏற்பாடுகளை செய்து கொடுத்துள்ளது.

சென்னை மெட்ரோ ரெயில் நிர்வாகத்தின் அதிகாரப்பூர்வ செயலி, பேடிஎம், சிங்கார சென்னை கார்டு, சிஎம்ஆர்எல் டிராவல் கார்டு போன்றவை மூலம் டிக்கெட் பெற்று பயணிகள் பயணம் மேற்கொள்ள முடியும்.

அதேபோல் வாட்ஸ் அப் சாட்பாட் (WhatsApp Chatbot) மூலமாகவும் வாட்ஸ்அப் ஆன்லைன் டிக்கெட் எடுத்து பயணம் செய்யலாம். ஆனால் தற்போது வாட்ஸ்அப் சாட்பாட் தொழில்நுட்ப கோளாறு காரணமாக தற்காலிகமாக செயல்படவில்லை என சென்னை மெட்ரோ ரெயில் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் மேற்கொண்ட மற்ற வசதிகளை பயன்படுத்திக் கொள்ள கேட்டுக் கொண்டுள்ளது. பயணிகளில் அசௌகரித்திற்கு வருந்துவதாகவும், தொழில்நுட்ப கோளாறு சரிசெய்யப்பட்டபின் அது குறித்து அப்டேட் செய்யப்படும் எனவும் தெரிவித்துள்ளது.

# பாஜக தலைவர் அண்ணாமலை மீது 2 பிரிவுகளின் கீழ் சூலூர் போலீசார் வழக்குப்பதிவு




கோவை, ஏப். 16

கோவை மக்களவை தொகுதியில் தமிழக பா.ஜனதா தலைவர் அண்ணாமலை போட்டியிடுகிறார். அவர் தீவிர வாக்கு சேகரிப்பு பணியில் ஈடுபட்டு வருகிறார். கடந்த சில தினங்களுக்கு முன்னதாக திமுக பாஜக தொண்டர்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டது. இது தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

இதற்கிடையே சூலூர் போலீசார் அனுமதியின்றி கூடுதல், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்துதல் உள்ளிட்ட பிரிவுகளில் அண்ணாமலை மற்றும 300 பேர் மீது வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

கோவை தொகுதியில் அண்ணாமலையை எதிர்த்து திமுக சார்பில் கணபதி ராஜ்குமார், அதிமுக சார்பில் சிங்கை ராமச்சந்திரன், நாம்தமிழர்கட்சி சார்பில் கலாமணி ஜெகநாதன் ஆகியோர் போட்டியிடுகிறார்கள்.

# பிரதமர் மோடி நெல்லை வருகை: பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் பேசுகிறார்



நெல்லை, ஏப்.16

நெல்லை பாராளுமன்ற தொகுதியில் போட்டியிடும் பா.ஜனதா வேட்பாளர் நயினார் நாகேந்திரனை ஆதரித்து வாக்கு சேகரிப்பு

தமிழகத்தில் பாராளுமன்ற தேர்தல் பிரசாரம் இறுதிகட்டத்தைநெருங்கி வருகிறது. இன்றுடன் இன்னும் 3 நாட்களே இருக்கும் நிலையில் தேர்தல் பரப்புரை மேற்கொள்ள தேசிய கட்சிகளான பா.ஜனதா, காங்கிரஸ் மற்றும் தமிழகத்தின் பிரதான கட்சிகளான அ.தி.மு.க. மற்றும் தி.மு.க.வின் முக்கிய தலைவர்கள் மாவட்டந்தோறும் முகாமிட்டு தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் தமிழக தேர்தல் களம் சூடு பிடித்துள்ளது.

இந்நிலையில் தமிழகத்தில் தனியாக கூட்டணி அமைத்து போட்டியிடும் பா.ஜனதா வெற்றி முனைப்பில் தீவிர வாக்கு வேட்டை நடத்தி வருகிறது.

வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரதமர் மோடியும் தமிழகத்திற்கு வந்து வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார். பிரதமர் மோடி கடந்த 10ந்தேதி வரை 7 முறை தமிழகத்திற்கு வந்து பா.ஜனதா மற்றும் கூட்டணி கட்சியினரைஆதரித்துபேசியுள்ள நிலையில் நெல்லை பாராளுமன்ற தொகுதியில் போட்டியிடும் பா.ஜனதா வேட்பாளர் நயினார் நாகேந்திரன் எம்.எல்.ஏ.வை ஆதரித்து பேசி வாக்கு சேகரிப்பதற்காக இன்று நெல்லை வருகிறார்.

நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அகஸ்தியர்பட்டியில் பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் பங்கேற்று மக்களிடையே பேச உள்ளார். அவர் தேர்தல் தேதி அறிவிக்கப்படும் முன்பே நெல்லையில் கடந்த மாதம் நடத்தப்பட்ட பொதுக்கூட்டத்தில் பங்கேற்று பேசினார்.

இந்நிலையில் நெல்லை பாராளுமன்ற தொகுதியில் போட்டியிடும் பா.ஜனதா வேட்பாளர் நயினார் நாகேந்திரன் எம்.எல்.ஏ.வை ஆதரித்து பேசி வாக்கு சேகரிப்பதற்காக அவர் நெல்லைக்கு மீண்டும் வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த பொதுக்கூட்டத்தில் குமரி தொகுதி பா.ஜனதா வேட்பாளர் பொன். ராதாகிருஷ்ணன், தூத்துக்குடி மற்றும் தென்காசி தொகுதி கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களை ஆதரித்தும் பிரதமர் மோடி பேச உள்ளதாக கட்சி நிர்வாகிகள் தெரிவித்தனர். பிரதமர் மோடி வருகையையொட்டி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

# வாக்குப்பதிவு எந்திரங்களை 46 நாட்கள் பாதுகாக்க சிறப்பு ஏற்பாடுகள்: 3 அடுக்கு போலீஸ் பாதுகாப்பு



சென்னை, ஏப்.16

பாராளுமன்ற தேர்தலுக்கான ஓட்டுப்பதிவு வருகிற 19ந்தேதி நடைபெறு கிறது. இதையொட்டி வாக்குப்பதிவு மின்னணு எந்திரங்களை மையங்களுக்கு ஒதுக்குவது, வாக்குச் சாவடி அலுவர்களுக்கு பயிற்சி அளிப்பது உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சென்னையில் 16 சட்டசபை தொகுதிகளை உள்ளடக்கி, தென்சென்னை, மத்திய சென்னை, வட சென்னை ஆகிய 3 பாராளுமன்ற தொகுதிகள் உள்ளது.

இதில் வடசென்னையில் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள திருவொற்றியூர் சட்டசபை தொகுதியும், தென் சென்னை தொகுதியில் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள சோழிங்கநல்லூர் தொகுதியும் கூடுதலாக வருகிறது.

இதை சேர்த்து பார்க்கும் போது 18 சட்டசபை தொகுதிகளில் 48 லட்சத்து 35 ஆயிரத்து 672 வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர். இதற்காக 4,680 வாக்குச்சாவடி மையங்களில் 14,891 ஓட்டுப்பதிவு எந்திரங்கள் பயன்படுத்தப்பட உள்ளன.

வடசென்னைக்கு ராணி மேரி கல்லூரியிலும்மத்தியசென்னைக்கு லயோலா கல்லூரியிலும், தென்சென்னைக்கு அண்ணா பல்கலைக்கழகத்திலும் பதிவாகும் வாக்குப்பதிவு எந்திரங்களை பாதுகாப்பாக வைக்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

ஓட்டு எண்ணப்படும் கல்லூரிகளில் இதற்காக 2 பெரிய அறைகள் ஒதுக்கப்பட்டு பெட்டிகளை வைக்க வரிசைப்படி நம்பர் எழுதப்பட்டுள்ளது. இதே போல் ஓட்டு எண்ணுவதற்கு 2,500 முதல் 5 ஆயிரம் சதுர அடி பரப்பில் அறைகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

அங்கு சவுக்கு தடுப்பு கம்புகள், கம்பி வலைகள் கட்டப்பட்டு ஓட்டு எண்ணும் அலுவலர்கள், பொது பார்வையாளர்கள், வேட்பாளர்களின் முகவர்கள் அமர வசதி செய்யப்பட்டு வருகிறது.

பதிவாகும் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் பலத்த பாதுகாப்புடன்கொண்டுவரப்படும்போது அதை வைப்பதற்கான அறை தயார் செய்யப்பட்டுள்ளதால் அந்த அறைக்கு யார்யார் பொறுப்பு அதிகாரிகள் என்று பட்டியலும் தயார் செய்யப்பட்டுள்ளது.

இதே போல் அந்த அறையை பூட்டி யார் சீல் வைக்க வேண்டும். 24 மணி நேரமும் சுழற்சி முறையில் கண்காணிக்க எந்தெந்த போலீசார் நிறுத்தப்பட வேண்டும் என்ற பட்டியலும் தயார் செய்யப்பட்டுள்ளது.

இதோடு ஓட்டு எந்திரங்கள் பாதுகாப்பாக வைக்கப்படும் வளாகம் முழுவதும் சுழலும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு 24 மணி நேரமும் கண்காணிக்க இப்போதே ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இவற்றை பார்வையிட்ட மாவட்ட தேர்தல் அதிகாரியான மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன் அங்குள்ள அதிகாரிகளுக்கு தேர்தல் பணிகளை சிறப்பாக மேற்கொள்வதற்கான அறிவுரைகளை வழங்கினார். வாக்கு எண்ணும் பணியில் ஈடுபட உள்ள அரசு அலுவலர்கள், பாதுகாப்பு பணிக்கு வரும் போலீசார் யார்யார்? என்ற பட்டியலும் இப்போதே தயார் செய்யப்பட்டு உள்ளது.

# பிரதமர் மோடி நெல்லை வருகை: பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் பேசுகிறார்



நெல்லை, ஏப்.16

நெல்லை பாராளுமன்ற தொகுதியில் போட்டியிடும் பா.ஜனதா வேட்பாளர் நயினார் நாகேந்திரனை ஆதரித்து வாக்கு சேகரிப்பு

தமிழகத்தில் பாராளுமன்ற தேர்தல் பிரசாரம் இறுதிகட்டத்தைநெருங்கி வருகிறது. இன்றுடன் இன்னும் 3 நாட்களே இருக்கும் நிலையில் தேர்தல் பரப்புரை மேற்கொள்ள தேசிய கட்சிகளான பா.ஜனதா, காங்கிரஸ் மற்றும் தமிழகத்தின் பிரதான கட்சிகளான அ.தி.மு.க. மற்றும் தி.மு.க.வின் முக்கிய தலைவர்கள் மாவட்டந்தோறும் முகாமிட்டு தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் தமிழக தேர்தல் களம் சூடு பிடித்துள்ளது.

இந்நிலையில் தமிழகத்தில் தனியாக கூட்டணி அமைத்து போட்டியிடும் பா.ஜனதா வெற்றி முனைப்பில் தீவிர வாக்கு வேட்டை நடத்தி வருகிறது.

வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரதமர் மோடியும் தமிழகத்திற்கு வந்து வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார். பிரதமர் மோடி கடந்த 10ந்தேதி வரை 7 முறை தமிழகத்திற்கு வந்து பா.ஜனதா மற்றும் கூட்டணி கட்சியினரைஆதரித்துபேசியுள்ள நிலையில் நெல்லை பாராளுமன்ற தொகுதியில் போட்டியிடும் பா.ஜனதா வேட்பாளர் நயினார் நாகேந்திரன் எம்.எல்.ஏ.வை ஆதரித்து பேசி வாக்கு சேகரிப்பதற்காக நெல்லை வருகிறார்.

நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அகஸ்தியர்பட்டியில் பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் பங்கேற்று மக்களிடையே பேச உள்ளார். அவர் தேர்தல் தேதி அறிவிக்கப்படும் முன்பே நெல்லையில் கடந்த மாதம் நடத்தப்பட்ட பொதுக்கூட்டத்தில் பங்கேற்று பேசினார்.

இந்நிலையில் நெல்லை பாராளுமன்ற தொகுதியில் போட்டியிடும் பா.ஜனதா வேட்பாளர் நயினார் நாகேந்திரன் எம்.எல்.ஏ.வை ஆதரித்து பேசி வாக்கு சேகரிப்பதற்காக அவர் நெல்லைக்கு மீண்டும் வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த பொதுக்கூட்டத்தில் குமரி தொகுதி பா.ஜனதா வேட்பாளர் பொன். ராதாகிருஷ்ணன், தூத்துக்குடி மற்றும் தென்காசி தொகுதி கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களை ஆதரித்தும் பிரதமர் மோடி பேச உள்ளதாக கட்சி நிர்வாகிகள் தெரிவித்தனர். பிரதமர் மோடி வருகையையொட்டி பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# ராமநாதபுரத்தில் பிரேமலதா விஜயகாந்த் தேர்தல் பிரசாரம்



பசும்பொன், ஏப். 16

ராமநாதபுரம் பாராளுமன்ற தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் பா.ஜெயபெருமாளுக்கு இரட்டை இலைக்கு வாக்குகள் சேகரித்து தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் கமுதியில் பேசியதாவது:

ராமநாதபுரம் பாராளுமன்ற தொகுதி அ.தி.மு.க. கூட்டணி வேட்பாளர் பா.ஜெயபெருமாள் பண்பாளர். மக்களின் பிரச்சனைகளை தீர்க்க ஓடோடி வருவார். கச்சத்தீவை ஒப்படைத்தவர்களும், ஆட்சியில் இருப்பவர்களும் இப்போது கச்சத்தீவை மீட்போம் என்கிறார்கள். மீனவர்களின் பாதுகாப்பு மிக அவசியம், மீனவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த இரட்டை இலைக்கு வாக்களியுங்கள். அ.தி.மு.க. ஆட்சியில் தான் மக்கள் நல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அனைத்தையும் தி.மு.க. ஆட்சி நிறுத்தி விட்டது.

உலக தமிழர்களுக்காக பாடுபட்டவர் விஜயகாந்த். தமிழர்களுக்காக டெல்லியில் போராட்டம் நடத்தினார். மானாமதுரையிலிருந்து கமுதி, சாயல்குடி வழியாக ரெயில் பாதை அமைக்க பாராளுமன்றத்தில் குரல் கொடுக்கப்படும் .

தமிழக மக்களின் நலனில் அதிக அக்கறையுடன் செயல்பட்டவர்கள் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா, எடப்பாடி பழனிசாமி ஆகியோர் ஆட்சிதான். அ.தி.மு.க. கூட்டணி அமோக வெற்றி பெறும். பா.ஜெயபெருமாளுக்கு இரட்டை இலை சின்னத்தில் வாக்களித்து அமோக வெற்றி பெறச் செய்யுங்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.

பிரசாரத்தில் அ.தி.மு.க. வேட்பாளருடன்மாவட்ட செயலாளர் எம்.ஏ. முனியசாமி, ராமநாதபுரம் பாராளுமன்ற அ.தி.மு.க. தேர்தல் பொறுப்பாளர்கள் முன்னாள் எம்எல்ஏ மலேசியா, எஸ்.பாண்டியன், முன்னாள் எம்.பி. எம்.எஸ். நிறைகுலத்தான். மாவட்ட அவைத்தலைவர் சாமிநாதன். தே.மு.தி.க. சிங்கை சின்னா. எம்.ஜி.ஆர். மன்ற துணை செயலாளர் சுந்தரபாண்டியன், ஒன்றிய செயலாலர்கள் பெரியசாமி தேவர், காளி முத்து, ராஜேந்திரன்,

அ.தி.மு.க. நிர்வாகிகள் கர்ணன். எஸ்.டி. செந்தில் குமார். கருப்பசாமி ஆகியோர் வெற்றி கலந்து கொண்டனர்.

# உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு சென்ற ரூ.10 லட்சம் பறிமுதல்



ஈரோடு, ஏப். 16

தமிழகத்தில் பாராளுமன்ற தேர்தல் வரும் 19ந் தேதி நடைபெற உள்ளது.

வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசுப்பொருட்கள் வழங்குவதை தடுக்கும் பொருட்டு பறக்கும் படை, நிலை கண்காணிப்பு குழு அதிகாரிகள் தீவிர கண்காணிப்பு மற்றும் வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் ஈரோடு மாவட்டம் சித்தோடு ஆவின் அருகே பறக்கும் படை அதிகாரிகள் வாகன சோதனையில் ஈடுபட்டு கொண்டிருந்தனர். அப்போது அந்த வழியாக வீரப்பன்சத்திரத்தில் இருந்து பவானி நோக்கி சென்று கொண்டிருந்த ஏ.டி.எம். எந்திரங்களுக்கு பணம் கொண்டு செல்லும் வாகனத்தை நிறுத்தி சோதனை செய்தனர். அதில் உரிய ஆவணங்கள் இன்றி ரூ.10 லட்சம் பணம் இருப்பது தெரிய வந்தது.

இது குறித்து ஓட்டுனரிடம் கேட்டுள்ளனர். அதற்கு அவர் இன்று ஏ.டி.எம். எந்திரங்களுக்கு பணம் நிரப்ப ரூ.67 லட்சம் கொண்டு சென்றதாகவும், அதில் ரூ.64 லட்சம் ஏ.டி.எம். எந்திரத்தில் வைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

ஆனால் அவர் கொடுத்த ஆவணங்களின்படி ரூ.3 லட்சம் மட்டுமே மீதம் இருக்க வேண்டிய நிலையில் ரூ.10 லட்சம் இருந்ததால் சந்தேகம் அடைந்த அதிகாரிகள் ரூ.10 லட்சத்தை பறிமுதல் செய்து முதன்மை தேர்தல் நடத்தும் அலுவலரிடம் ஒப்படைத்தனர்.

# மீன்பிடி தடைகாலம் அமல்



ராயபுரம், ஏப். 16

தமிழக கடல் பகுதியில் ஆண்டுதோறும்மீன்களின் இனப்பெருக்கத்திற்காக 61 நாட்கள் மீன்பிடி தடைகாலம் அறிவிக்கப்படும். இந்த காலகட்டத்தில் மீனவர்கள் ஆழ்கடலுக்குள் மீன்பிடிக்க செல்லமாட்டார்கள். விசை படகுகள், மீன்வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங் களை சீரமைக்கும் பணியில மீனவர்கள் ஈடுபடுவார்கள்.

இந்த நிலையில் இந்த ஆண்டுக்கான மீன்பிடி தடை காலம் இன்று நள்ளிரவு முதல் தொடங்குகிறது. இது வருகிற ஜூன் மாதம் 14ந் தேதி வரை 61 நாட்கள் அமலில் இருக்கிறது.

மீன்பிடி தடைகாலம் தொடங்கும் நிலையில் இன்று விடுமுறை நாளான ஞாயிற்றுக்கிழமை என்பதால் காசிமேட்டில் ஆழ்கடலில் மீன்பிடிக்க சென்ற அனைத்து விசைப்படகுகளும் கரைக்கு திரும்பின.

இதனால் கடந்த வாரத்தை விட வஞ்சிரம், வவ்வால் போன்ற மீன்கள் வரத்து அதிகமாக இருந்தது. ஆனால் இன்று தமிழ் புத்தாண்டு என்பதால் மீன்கள் வாங்க மக்கள் கூட்டம் குறைவாக காணப்பட்டது. இதன் காரணமாக மீன்விலை சற்று குறைவாகவே விற்கப்பட்டது.

கடந்த வாரத்தில் ரூ.1300 வரை விற்கப்பட்ட வஞ்சிரம் இன்று ரூ.800க்கு விற்கப்பட்டது. கடமா எப்போதும் விற்கப்படும் விலையை விட ரூ.200 வரை குறைத்து விற்கப்பட்டும் அதனை வாங்க ஆட்கள் இல்லை.

இதனால் வார இறுதி நாட்களில் எப்போதும் பரபரப்பாக காணப்படும் காசிமேடு மார்க்கெட் இன்று வழக்கமான உற்சாகம் இன்றி காணப்பட்டது. இன்று நள்ளிரவு முதல் மீன்பிடி தடைகாலம் தொடங்குவதால் இன்னும் 2 மாதத்திற்கு இதே நிலைதான் இருக்கும் என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

காசிமேடு மார்க்கெட்டில் மீன்விலை (கிலோவில்)வருமாறு:

வஞ்சிரம் ரூ.800, வவ்வால் ரூ.700, வெள்ளை வவ்வால் ரூ.1200, சங்கரா ரூ.300, கடமா ரூ.100, நெத்திலி ரூ.300, நண்டு ரூ.300, இறால் பெரியது (டைகர்) ரூ.1200, இறால் சிறியது ரூ.600. இதுகுறித்து மீனவர்கள் கூறும் போது, மீன்பிடி தடைகால் இன்று நள்ளிரவு முதல் அமலுக்கு வருகிறது. இதனால் ஆழ்கடலில் மீன்பிடிக்க சென்ற விசைப்படகு மீனவர்கள் அனைவரும் கரைக்கு திரும்பிவிட்டனர். மீன்பிடி தடைக்காலம் தொடங்கிய பின்னர் இங்குள்ள மீன் விற்பனை கூடம் இனி 1 ½ மாதத்திற்கு வெறிச்சோடி கிடக்கும். அதே நேரம் கடலுக்கு செல்ல கட்டுமரங்கள், பைபர் படகுகளுக்கு தடை இல்லை என்பதால் அவர்கள் கடற் கரையோரத்தில் மீன் பிடித்து திரும்பி விடுவார்கள். இதனால் மீன்களுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டு விலை அதிகமாகும் என்றனர்.

## புள்ளி விவரத்துடன் பேசுவதால் அண்ணாமலையை கண்டால் எதிர்கட்சியினருக்கு அச்சம் சரத்குமார்



கோவை, ஏப். 16

கோவை தொகுதியில் போட்டியிடும் பா.ஜ.க வேட்பாளர் அண்ணாமலையை ஆதரித்து நடிகர் சரத்குமார் கோவை மணியகாரம்பாளையத்தில் பிரசாரம் மேற்கொண்டார்.

பா.ஜனதா கூட்டணியின் பிரதமர் வேட்பாளர் மோடி என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் இந்தியா கூட்டணியில் பிரதமர் வேட்பாளர் யார் என்றே தெரியவில்லை. பொதுவாக எந்த ஒரு விளையாட்டாக இருந்தாலும் அதில் தலைவன் என்று ஒருவன் இருக்க வேண்டும். தலைவன் இல்லை என்றால் அதனை ஒரு போட்டியாகவே கருதமுடியாது.

அதுபோன்று தான் எதிர் கட்சிகளில் யார் பிரதமர் வேட்பாளர் என்றே தெரியாமல் பயணித்து கொண்டிருக்கிறார்கள். எதிர் கட்சிகளில் யார் தலைவர், பிரதமர்வேட்பாளர் என்று தெரியாத சூழ்நிலையில் அவர்களால் என்ன செய்ய முடியும் என்ற சூழலில் தான் இந்த தேர்தலை சந்திக்கிறோம்.

நல்லவர்கள், வல்லவர்கள், தொலைநோக்கு திட்டங்களுடன் செயல்படுவது தான் மோடியின் அரசு. கடந்த 10 ஆண்டுகாலம் எந்த ஒரு ஊழல் குற்றச்சாட்டும் இல்லாமல், அப்பழுக்கற்ற ஆட்சியை பிரதமர் மோடி தந்துள்ளார்.

50 ஆண்டுகாலமாக இந்தியாவில் ஆட்சி செய்த காங்கிரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா? என்று கேட்டால் ஒன்றும் கிடையாது. ஆனால் பிரதமர் மோடி 10 ஆண்டுகளில் பல திட்டங்களை கொண்டு வந்துள்ளார்.

அடுத்து 3வது முறையும் பிரதமராக மோடி தான் வருவார். பிரதமராக வந்ததும், அடுத்த 25 ஆண்டுக்கான திட்டங்களை இப்போதே தனது கையில் வைத்திருக்கிறார். அந்த திட்டங்களை நோக்கி அவரது பயணம் உள்ளது. இப்படி ஆட்சிக்கு வரும் முன்பே திட்டங்களை வகுத்து அதற்கு ஏற்ப செயல்படுகிறது பா.ஜ.க அரசு.

தி.மு.க., காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளிடம் எந்த திட்டமும் இல்லை. அதனால் தான் அவர்கள் எப்போது பார்த்தாலும் மோடியை விமர்சித்து வருகின்றனர். விமர்சிப்பவர்களுக்கு தனது செயல்கள் மூலம் அவர் பதிலடி கொடுத்து வருகிறார்.

தி.மு.க.வினர் மகளிர் உரிமை தொகை, விடியல் பயணம் உள்ளிட்ட வற்றை கொடுப்பதாக கூறுகிறார்கள். அதனை அந்த கட்சியில் உள்ள அமைச்சர் மற்றும் எம்.பி ஒருவர் பெண்களை கொச்சைப்படுத்தும் விதமாக பேசி வருகிறார்கள்.

தி.மு.கவினர் மக்களுக்கு கொடுப்பது உரிமைக்காக அல்ல. உங்களுடைய வாக்குக்காக தான். அதனை கொடுத்து விட்டு ஏளனம் செய்வது தான் தி.மு.க.வின் வாடிக்கையாக உள்ளது.

தங்களிடம் எந்த ஒரு திட்டமும் இல்லாததன் காரணமாகவே, உதயநிதி மற்றும் தி.மு.க, கூட்டணி கட்சியனர் பிரதமரை விமர்சித்து வருகிறார்கள்.

அண்ணாமலை எந்த விவகாரமாக இருந்தாலும் புள்ளி விவரத்துடன் பேசுகிறார். அதனால் எதிர்கட்சிகள் அவரை பார்த்து பயப்படுகிறார்கள். இவ்வாறு அவர் பேசினார்.

## நாட்டுக்கு சிறந்த பிரதமர் தேவை என்பதால் பாரதிய ஜனதாவை ஆதரிக்கிறோம் தினகரன்



சென்னை, ஏப். 16

பா.ஜனதா ஆதரவுடன் அ.ம.மு.க. பொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரன் தேனி தொகுதியில் போட்டியிடுகிறார். அவர் பா.ஜனதாவை ஆதரிப்பதற்கான காரணம் பற்றி விளக்கினார்.

கேள்வி:1999ல் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் பெரியகுளம் தொகுதியில் வெற்றி பெற்றீர்கள். 20 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் திரும்பி வந்து மக்களை சந்திக்கிறீர்கள். மக்கள் ஆதரவு எப்படி இருக்கிறது?

பதில்:19992004 கால கட்டத்தில் நான் பெரிய குளம் தொகுதி எம்.பி.யாக இருந்து நிறைய பணிகள் செய்து இருக்கிறேன். அரசியல் சூழ்நிலையால் அதன் பிறகு வெற்றி வாய்ப்பை இழந்தேன். நான் 21,155 வாக்குகள் பெற்று வெற்றி வாய்ப்பை இழந்தேன். இது மற்ற வேட்பாளர்களின் வாக்கு சதவீதத்துடன் ஒப்பிடும் போது நன்றாகவே இருந்தது. அதனால் என்னை அம்மா ஜெயலலிதா மேல் சபை எம்.பி. ஆக்கினார். தேனி தொகுதியில் உள்ள எந்த கிராமத்துக்கு சென்றாலும் மக்கள் நலனுக்காக நான் என்னென்ன செய்துள்ளேன் என்பது தெரியும்.

ஆண்டிப்பட்டி மற்றும் சேடப்பட்டியில்என்னால் உருவான அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை மற்றும் ஒருங்கிணைந்த குடிநீர் திட்டம் ஆகியவற்றால் 14 ஆண்டுகளுக்கு பிறகு திரும்பி வந்த எனக்கு மக்கள் மிக சிறப்பான வரவேற்பு கொடுத்தார்கள்.

கேள்வி: உங்களை எதிர்த்து போட்டியிடும் தங்க தமிழ்செல்வன் (தி.மு.க.), நாராயணசாமி (அ.தி.மு.க.) ஆகியோர் உங்களோடு அ.தி.மு.க.வில் இருந்தவர்கள் தான். இதனால் வாக்குகள் பிரிய வாய்ப்பு இருக்கிறதா?

பதில்: ஜெயலலிதா மறைவுக்கு பிறகு ஒரிஜினல் அ.தி.மு.க. என்பது இல்லை. இப்போது இருப்பது எடப்பாடி பழனிசாமியின் கட்சி. இரட்டை இலை சின்னத்தில் வேட்பாளர்களை நிறுத்தி தேசிய ஜனநாயக கூட்டணிக்கு வாக்குகள் போய் விடாமல் தடுக்கலாம் என்று நினைக்கிறார். தி.மு.க. மக்கள் விரோத கட்சியாக உள்ளது. எனவே அவர்கள் கனவு நிறைவேறப் போவதில்லை.

கேள்வி:தங்க தமிழ் செல்வனும், நீங்களும் ஒரேசமூகத்தை சேர்ந்தவர்களாக இருக்கும் போது சமூக ரீதியான வாக்குகள் அதிக அளவில் யாருக்கு கிடைக்கும்?

பதில்:தேனி ஒரு காஸ்மோபாலிடன் தொகுதி. 1952ம் ஆண்டு முதல் முஸ்லீம்கள் உள்பட அனைத்து சமூகங்களின் வேட்பாளர்களும் இங்கிருந்து தேர்வு செய்யப்பட்டு இருக்கிறார்கள். சமூகம் சார்ந்த பிரசாரங்கள் எவ்வளவு பலமாக இருந்தாலும் மக்கள் பார்த்து தான் வாக்களிப்பார்கள்.

கேள்வி: அ.தி.மு.க. கூட்டணியில் இருந்து வெளியேறிய பிறகும் பா.ஜனதா கூட்டணியால் வாக்குகளை அதிக அளவு பெற முடியும் என்று நினைக்கிறீர்களா?

பதில்: நான் அ.ம.மு.க.வை தொடங்கிய போது பா.ஜனதாவுடன் கூட்டணி வைக்கவில்லை. ஆனால் பிரதமரை தேர்வு செய்ய வேண்டும் என்று விரும்பியதால் தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைந்தோம்.

இந்த தேர்தலில் வெற்றி பெற்றால்பிரதமரின் ஒத்துழைப்போடு பல திட்டங்களை தொகுதியில் நிறைவேற்றுவேன்.

கேள்வி:உங்கள் குடும்ப உறுப்பினர்களின் கட்டுப்பாட்டில் உள்ள கொடநாடு கொலைகொள்ளை வழக்கில் உங்களுக்கு ஏதேனும் சந்தேகம் உள்ளதா?

பதில்:அந்த நேரத்தில் என் அத்தை சசிகலா ஜெயிலில் இருந்தார். நானும் கைது செய்யப்பட்டிருந்தேன். ஒரு காவலாளி மட்டும்தான் இருந்தார். பங்களாவுக்குள் நுழைந்தவர்கள் அம்மாவின் பாதுகாப்பில் ஊழல் அமைச்சர்கள் பற்றிய பதிவுகள் இருப்பதாக நம்பினார்கள்.

எனவே இந்த கொலை மற்றும் திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டது யார் என்பது மக்களுக்கு தெரியும்.

கேள்வி: ஜெயலலிதாவின் கொள்கைகளை பின்பற்றுவதாக கூறுகிறீர்கள். ஆனால் அவர் பா.ஜனதாவுக்கு எதிரானவர். நீங்கள் பா.ஜனதாவுடன் கூட்டணி வைத்திருப்பதை எப்படி நியாயப்படுத்த முடியும்?

பதில்:அம்மா உயிருடன் இருந்திருந்தால் அவரது நிலைப்பாட்டை நாங்கள்பின்பற்றிஇருப்போம். தற்போது தேசத்துக்கு தேவை சிறந்த பிரதமர். மோடிக்கு நிகரானவர்கள் இல்லை. எனவே உலகம் முழுவதும் உள்ள தலைவர்களால் பாராட்டப்படும் மோடிக்கு ஆதரவாக இந்த நிலைப்பாட்டை எடுத்துள்ளோம்.

கேள்வி:எடப்பாடி பழனிசாமிக்கான வாய்ப்புகள் மற்றும் உங்களைப் பற்றிய அவரது விமர்சனங்களை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்:எடப்பாடி பழனிசாமி யாரால் முதலமைச்சராக தேர்வு செய்யப்பட்டார் என்பது எல்லோருக்கும் தெரியும். என் அத்தை சசிகலா ஜெயிலில் இருந்த போது அவரை கட்சியை விட்டு நீக்கினார். எனவே மற்றவர்களை விமர்சிக்க அவருக்கு எந்த தகுதியும் இல்லை. அவரது வேட்பாளர்களுக்கு எதிராக மக்கள் வாக்களித்து பாடம் புகட்டுவார்கள்.

கேள்வி:உங்களால்தான் அ.தி.மு.க. பிளவு பட்டதாக தங்க தமிழ்செல்வன் கூறுகிறாரே?

பதில்:அவருக்கு பதில் சொல்லி நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை. அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்ட பிறகும் 2½ ஆண்டுகள் என்னுடன் இருந்தார். ஏன் அப்படி செய்தார் என்பது என் கேள்வி.

இவ்வாறு அவர் கூறினார்.

## தாம்பரம் மாவட்டத்தில் ரெயில் நிலையத்தில் ரூ.4 கோடி பறிமுதல்: பா.ஜ.க. பிரமுகருக்கு சம்மன்



தாம்பரம், ஏப். 16

கடந்த 6ந்தேதி இரவு தாம்பரம் ரெயில் நிலையத்தில் பறக்கும் படையினரால் ரூ.4 கோடி பணம் பறிமுதல் செய்யப்பட்டது. நெல்லை தொகுதி பா.ஜ.க. வேட்பாளர் நயினார் நாகேந்திரனுக்கு சொந்தமானது எனதகவல் பரவியது. இது தொடர்பாக நயினார் நாகேந்திரனுக்கு சொந்தமான ஓட்டல் மேலாளர் சதீஷ், நவீன், பெருமாள் ஆகிய 3 பேர் கைது செய்யப்பட்டனர்.

விருகம்பாக்கத்தைச் சேர்ந்த முருகன், ஜெய்சங்கர், ஆசைத்தம்பி ஆகியோர் நயினார் நாகேந்திரனுக்கு சொந்தமான கீழ்ப்பாக்கம் ஓட்டலில் பணத்தைவைத்துவிட்டு சென்றதாக கைது செய்யப்பட்டவர்கள் வாக்கு மூலம் அளித்துள்ளனர்.

இதையடுத்து நயினார் நாகேந்திரனுக்கு சொந்தமான ஓட்டல் உள்ளிட்ட இடங்களில் சோதனையும் நடந்தது.

இந்த சம்பவம் தொடர்பாக வருமானவரித்துறையினர் விசாரணை மேற்கொண்டு வரும் நிலையில் தாம்பரம் போலீசாரும் இந்த பணம் கைப்பற்றப்பட்டது தொடர்பாக தீவிர விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் பா.ஜ.க. தொழில்துறை மாநில துணைத்தலைவர் கோவர்தனன், கிரீன்வேஸ் சாலையில் நடத்திவரும் ஓட்டலிலும் ரூ. ஒரு கோடி பணம் கைப்பற்றப்பட்டது.

பா.ஜ.க. தொழில்துறை மாநில துணைத்தலைவர் கோவர்தனன் நடத்திவரும் ஓட்டலில் தேர்தல் நடக்கும் படையினர் மற்றும் தாம்பரம் போலீசார் அதிரடி சோதனை நடத்தி இந்த பணத்தை பறிமுதல் செய்துள்ளனர். இதனையடுத்து பாஜக தொழில் துறை மாநில துணைத்தலைவர் கோவர்தனன் நேரில் விசாரணை க்கு ஆஜராக தாம்பரம் போலீசார் சம்மன் அனுப்பி உள்ளனர். அவர் தற்போது உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் அவரது மகன் கிஷோர் ஆஜராக வேண்டும் என போலீசார் தெரிவித்துள்ளனர்.

## 25 ஆண்டு முடிசூடா மன்னனாக இருந்தேன் : பா.ஜ.க.வால் தோற்றேன் ஜெயக்குமார்



சென்னிய, ஏப். 16

சென்னையில் செய்தியாளர் சந்திப்பின் போது அதிமுக அமைப்பு செயலாளர்ஜெயக்குமார்கூறியதாவது:

2019 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் அதிமுகவுடன் கூட்டணி வைத்ததால்தான் நாங்கள் தோல்வி அடைந்தோம் என்று பாஜகவினர் கூறுகிறார்களே என்று செய்தியாளர் ஒருவர் கேட்க, அதற்கு ஜெயக்குமார் "இவர்களுடன் கூட்டணி வைத்ததால் தான் எங்கள் ஆட்சியே பறிபோனது என்றும், இல்லையென்றால் நாங்கள் வெற்றி பெற்று இருப்போம்.

நானெல்லாம் ராயபுரத்தில் தோற்கிற ஆளா? நான் இப்போது மனம் திறந்து சொல்கிறேன். 25 ஆண்டுகளாக முடிசூடா மன்னனாக இந்த ராயபுரத்தில் இருந்தேன். தோல்வி என்பதையே அறியாத ஆள் நான். பாஜகாவால் தான் தோற்றேன். பாஜகா என்று ஒன்று இல்லை என்றால் நானெல்லாம் சட்ட மன்றத்தில் இருந்திருப்பேன். எனதுதொகுதியான ராயபுரத்தில் கிறிஸ்துவர், இஸ்லாமியர் என 40 ஆயிரம் சிறுபான்மையினர் ஓட்டுகள் இருந்தது. என் மீது எனது தொகுதி மக்களுக்கு எந்தவித கோபமும் கிடையாது. அப்போதே என் தொகுதி மக்கள் கூறினார்கள் பாஜகவை கழட்டி விட்டுவிடுங்கள் என்று, நான் சொன்னேன் வேஸ்ட் லக்கேஜ் தான்.. வேறு என்ன செய்வது.. சமயம் வரும் போது கழட்டி விட்டுவிடுவோம் என்று கூறினோம்

அதே போல் இப்போது கழட்டிவிட்டுவிட்டோம். பாஜக வேஸ்ட் லக்கேட், அந்த பேட்டி இனிமேல் ஓடாத பேட்டி, ஓடாத வண்டி, பழைய மோட்டார் சைக்கிள் என்று நினைத்து கழட்டி விட்டு விட்டோம். பாஜக இல்லை என்றால் நாங்கள் தான் 40 தொகுதியிலும் வெற்றி பெற்றிருப்போம் என்பதை உறுதியாக கூறுகிறேன்.

## தி.மு.க., அ.தி.மு.க. மக்களை அடிமையாக வைத்திருக்கிறார்கள்

மேட்டுப்பாளையம், ஏப். 16

நீலகிரி பாராளுமன்ற தொகுதி பா.ஜ.க. வேட்பாளர் எல்.முருகன் மேட்டுப்பாளையம் அருகே உள்ள வெள்ளியங்காடு பகுதியில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது அவர் பேசியதாவது:

பிரதமர் மோடி ஏழை எளிய மக்களுக்காக பல் வேறு நல்ல திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். நம்மை 70 ஆண்டுகள் ஆட்சி செய்த தி.மு.க.அ.தி.மு.ககட்சிகள்இன்னும் அடிமையாக வைத்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக பட்டியலின மக்கள் அடிப்படை வசதிகளுக்கு கூட கையேந்தும் நிலையில்தான் உள்ளனர்.

ஆனால் பிரதமர் மோடி அனைவருக்கும் வீடு கட்டும் திட்டம், இலவச கியாஸ் இணைப்பு மற்றும் பல்வேறு திட்டங்களை அமல்படுத்தி உள்ளார்.

மத்திய அரசின் ஜல்ஜீவன் திட்டத்தின்கீழ் அனைத்து பொதுமக்களுக்கும் தண்ணீர் இணைப்புவழங்கப்பட்டு உள்ளது. ஆனால் தமிழகத்தில் தி.மு.க மற்றும் அ.தி.மு.க.வை சேர்ந்த ஒருசிலர் ஜல்ஜீவன் திட்டத்தில் குடிநீர் இணைப்பு கொடுக்க லஞ்சம் கேட்டு மிரட்டுவதாக சொல்கிறார்கள். ஏழை மக்களுக்கு தரப்படும் தண்ணீரில் யாராவது கைவைத்தால், அவர்கள் ஜூன் மாதத்திற்கு பிறகு சிறைக்கு செல்வது உறுதி.

இந்த பகுதியின் வனவிலங்கு பிரச்சனை நிரந்தர தீர்வு காணப்படும். மேலும் பில்லூர் அணை தூர்வாரப்பட்டு, அங்குள்ள வண்டல் மண் விவசாயிகளுக்கு தரப்படும். கேரளாதமிழகம் இணைப்பு சாலை அமைக்கப்படும். ஏழை, எளிய மக்கள் வசிக்கும் குறிப்பாக அருந்ததியர்கள் வசிக்கும் பகுதிகளில் மயான வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் போர்க்கால அடிப்படையில் செய்து தரப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## ஜெயலலிதா வழியில் சாதாரண தொண்டனையும் எம்.எல்.ஏ.க்களாக உருவாக்கியவர் விஜயகாந்த்

தஞ்சாவூர், ஏப். 16

தஞ்சை பாராளுமன்ற தொகுதியில் அ.தி.மு.க. கூட்டணி தே.மு.தி.க. வேட்பாளர் சிவநேசனை ஆதரித்து தே.மு.தி.க. துணை பொதுச்செயலாளர்சுதீஷ்தஞ்சைஅன்னை சத்யா மைதானத்தில் நடைபயிற்சி செய்த பொது மக்களிடம் முரசு சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். பின்னர் அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

தேர்தலில் போட்டியிட தி.மு.க. வில் குறைந்தபட்சம் ரூ.100 கோடிகள் இருந்தால் தான் சீட் தருவார்கள்.

இதனை மாற்றியவர் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா தான். சாதாரண தொண்டையும் மந்திரிகளாக, எம்.பிக்களாக ஆக்கியவர்.



அவரை தொடர்ந்து விஜயகாந்தும் சாதாரண தொண்டர்களை வேட்பாளராக நிறுத்தி எம்.எல்.ஏக்களாக உருவாக்கியவர். இவ்வாறு அவர் கூறினார்.

## ஈரோடு: வீட்டின் ஓட்டை பிரித்து இறங்கி ரூ.20 லட்சம், 20 பவுன் நகை கொள்ளை



ஈரோடு: ஏப். 16

ஈரோடு பழைய மார்க்கெட் அருகே ஜின்னா வீதியைசேர்ந்தவர்சிராஜூதீன் (வயது 70). இவரது மனைவி லைலா பானு. இவர்களுக்கு 2 மகள்களும், ஒரு மகனும் உள்ளனர். அனைவருக்கும் திருமணமாகிதனியாகவசித்து வருகிறார்கள்.

மூத்த மகள் மட்டும் தந்தை வீட்டு அருகே திருமணமாகி வசித்து வருகிறார். சிராஜூதீன்டெக்கரேஷன் வேலை பார்த்து வந்தார். நேற்று காலை சிராஜூதீன் மற்றும் குடும்பத்தினர் விடுமுறையை கழிக்கும் வகையில் ஊட்டிக்கு சுற்றுலா சென்று விட்டனர்.

இதையடுத்து நள்ளிரவு 12:30 மணியளவில் மீண்டும் வீட்டுக்கு வந்தனர். வீட்டின் கதவை திறந்து அனைவரும் உள்ளே சென்றனர்.

அப்போது நடுவீட்டில் ஓடு பிரிந்து இருப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தனர். பீரோ இருக்கும் அறையின் கதவு உடைக்கப்பட்டிருப்பதை கண்டு மேலும் அதிர்ச்சி அடைந்தனர்.

உள்ளே சென்று பார்த்த போது பீரோவில் இருந்த ரூ.20 லட்சம் ரொக்க பணம் மற்றும் 20 பவுன் நகைகளை மர்ம நபர்கள் கொள்ளையடித்து சென்றது தெரிய வந்தது. சிராஜூதீன் சொந்தமாக நிலம் வாங்குவதற்காக ரூ.20 லட்சம் பணத்தை பீரோவில் வைத்திருந்தார்.

இதுகுறித்து ஈரோடு டவுன் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. தகவல் அறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணைமேற்கொண்டனர். போலீசாரின் முதற்கட்ட விசாரணையில் வீட்டில் ஆளில்லாததை நோட்டமிட்ட மர்ம நபர்கள் இந்த துணிகர கொள்ளையில் ஈடுபட்டது தெரிய வந்துள்ளது.

சம்பவ இடத்துக்கு கை ரேகைநிபுணர்களும்வந்து தடயங்களை சேகரித்து சென்றனர். இதுகுறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் அந்த பகுதியில் பொருத்தப்பட்டிருக்கும் சி.சி.டி.வி. கேமராகாட்சிகளையும் ஆய்வு செய்து கொள்ளையடித்து சென்ற மர்ம நபர்களைபோலீசார் தேடி வருகின்றனர். ஆட்கள் அதிகம் நடமாட்டம் உள்ள பகுதியில் நடந்த இந்ததுணிகரக்கொள்ளை சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## ஆசனூர் அருகே சோதனைசாவடியை முற்றுகையிட்ட ஒற்றை யானை



தாளவாடி, ஏப். 16

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் மொத்தம் 10 வனச்சரகங்கள் உள்ளன.

இந்த வனச்சரகத்தில் யானை, சிறுத்தை, புலி, கரடி, செந்நாய், மான், போன்ற வனவிலங்குகள் வசித்து வருகின்றன.

இந்த வன சாலை வழியாக திண்டுக்கல்லில் இருந்து பெங்களூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலை அமைந்துள்ளது. இச்சாலையில் எப்போதும் வாகன போக்குவரத்து இருந்து கொண்டே இருக்கும்.

தேசிய நெடுஞ்சாலையை யானைகள் குட்டிகளுடன் கடந்து செல்வது வழக்கம். கடந்த சில மாதங்களாக தமிழகர் நாடக எல்லை காரப்பள்ளம் சோதனை சாவடி அருகே யானைகள் சாலையில் உலா வருவதும், வாகனங்களை வழி மறைத்து துரத்துவதும் தொடர்கதையாகி வருகிறது.

இந்நிலையில் நேற்று மாலை 6 மணியளவில் ஆசனூர் அடுத்த காரப்பள்ளம் சோதனைசாவடியில் ஆசனூர் போலீசார் மற்றும் வனத்துறையினர் வாகன சோதனையில் ஈடுபட்டு கொண்டிருந்தனர்.

அப்போது வனப்பகுதியில் இருந்து வெளியேறிய ஒற்றை யானை சோதனைசாவடி அருகே வந்தது. சோதனைசாவடி அருகே வந்த ஒற்றை யானை போலீசார் மற்றும் வனத்துறையினரை தாக்குவது போன்று வந்தது.

இதை கண்ட போலீசார், வனத்துறையினர் அலறி அடித்து ஓட்டம் பிடித்தனர். சுமார் 15 நிமிடம் சாலையில் ஒற்றை யானை உலா வந்தது. இதனால் அவ்வழியாக வந்த வாகனங்கள் இருபுறமும் அணிவகுத்து நின்றன.

இதனால் கர்நாடகதமிழகம் இடையே சுமார் 15 நிமிடங்கள் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. பின்னர் மெதுவாக யானை வனப்பகுதியில் சென்றது. அதன் பின்னரே போலீசார், வனத்துறையினர்நிம்மதிஅடைந்தனர். வாகனங்களும் சென்றன. இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

## ஓ.டி.டி.யில் வெளியானது யாத்ரா 2



மறைந்த ஆந்திர முதல்மந்திரி ஒய்.எஸ்.ராஜசேகர ரெட்டியின் வாழ்க்கை கதை, 'யாத்ரா' என்ற பெயரில் 2019ல் திரைப்படமாக வெளிவந்தது. இதில் ராஜசேகர ரெட்டி கதாபாத்திரத்தில் மம்முட்டி நடித்து இருந்தார். இதன் தொடர்ச்சியாக ராஜசேகர ரெட்டியின் மகனும் தற்போதைய ஆந்திர முதல்மந்திரியுமான ஜெகன் மோகன் ரெட்டியின் வாழ்க்கை கதை 'யாத்ரா2' என்ற பெயரில் உருவாகி வெளியானது.

மஹி வி ராகவ் இயக்கியுள்ள 'யாத்ரா2' படத்தில் ஜெகன் மோகன் ரெட்டியின் கதாபாத்திரத்தில் நடிகர் ஜீவா நடித்திருந்தார். இந்த படத்துக்கு சந்தோஷ் நாராயணன் இசையமைத்திருந்தார். ஜெகன் மோகன் ரெட்டியின் இளம்வயது அரசியல் வாழ்க்கையில் இருந்து ஆந்திர முதல் மந்திரியானது வரை நடந்த சம்பவங்கள் இந்த படத்தில் இடம்பெற்றுள்ளது.

பிப்ரவரி 8ம் தேதி வெளியாகிய இந்தப்படம் பாக்ஸ் ஆபிஸில் பெரிதாக வெற்றியைக் குவிக்கவில்லை. தற்போது அமேசான் ஓடிடி தளத்தில் வெளியாகியுள்ளது.

## கோவில் திருவிழாவில் குத்தாட்டம் போட்ட லட்சுமி மேனன்... செல்பி எடுக்க ரசிகர்கள் குவிந்ததால் தள்ளுமுள்ளு



சேலத்தில் நடந்த கோவில் திருவிழா ஒன்றில் நடிகை லட்சுமி மேனன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, மேடையில் நடனக்கலைஞர்களுடன் குத்தாட்டம் போட, உற்சாகத்தில் மேடையில் ஏறிய ரசிகர்கள்செல்பிஎடுத்துகலவரம்செய்திருக்கின்றனர்.

'கும்கி', 'சுந்தரபாண்டியன்' உள்ளிட்டப் பல படங்களில் நடித்துப் பிரபலமானவர் நடிகை லட்சுமி மேனன். வேதாளம் படத்தில் அஜித்துக்குதங்கையாக நடித்திருந்தார். 'நான் சிகப்பு மனிதன்', 'ஜிகர்தண்டா', 'கொம்பன்' என இவர் நடித்தப் படங்கள் அடுத்தடுத்து இவருக்கு கைக்கொடுத்தாலும், நடிகர் விஷாலுடன் ஏற்பட்ட காதல் கிசுகிசு சினிமாவில் இவருக்கு பின்னடைவை ஏற்படுத்தியது.

இதற்கிடையில் படிப்பிலும் கவனம் செலுத்த வேண்டி இருந்ததால் சினிமாவிற்கு சில காலம் பிரேக் விட்டார். இப்போது சினிமாவில் கம்பேக் கொடுத்துள்ளார் லட்சுமி மேனன்.

இந்நிலையில், சேலம் அருகே நேற்று நடைபெற்ற கோவில் திருவிழாவில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இதில் நடிகை லட்சுமி மேனன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். அவருக்கு ரசிகர்கள் உற்சாக வரவேற்புக் கொடுத்தனர். அவர்களுடன் கலந்துரையாடிய பின்பு நடன கலைஞர்களுடன் மேடையில் குத்தாட்டம் போட்டார் லட்சுமி மேனன்.

'கும்கி' படத்தில் இடம்பெற்ற 'சொய்ங்...சொய்ங்...' பாடலுக்கு ஆடியவரை இன்னொரு பாடலுக்கு ஆட வேண்டும் என்று ரசிகர்கள் ஆரவாரம் செய்தனர். இதனால், லட்சுமி மேனன் நடித்தப் பிற படங்களில் இருந்தும் பாடல்கள் ஒலிக்கப்பட, நடனமாடி அங்கிருந்த ரசிகர்களை உற்சாகப்படுத்தினார். லட்சுமிமேனன் ஆட்டத்தை கண்ட இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் அவருடன் செல்பி எடுக்க வேண்டும் என்று முண்டியடித்துக் கொண்டு மேடையை நோக்கி வந்தனர். ஆயிரக்கணக்கான ரசிகர்கள் மேடையை நோக்கி வந்தனர். சிலர் மேடையில் ஏறியும் அவருடன் செல்பி எடுக்க முயன்றனர். இதனால், அந்தப் பகுதியில் சிறிது நேரம் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. உடனே, அங்கிருந்த காவல்துறையினர் அனைவரையும் அப்புறப்படுத்தினர். காவல்துறையினரின் தடுப்புகளையும் மீறி ஒரு சில இளைஞர்கள், பெண்கள் மேடைக்கு சென்று செல்பி எடுத்தனர். பின்பு, அங்கிருந்து காவல்துறையினர் உதவியோடு லட்சுமி மேனன் பத்திரமாக அனுப்பி வைக்கப்பட்டார். கடந்த ஆண்டு 'சந்திரமுகி 2' படத்தில் நடித்த லட்சுமி மேனன் இந்த ஆண்டு அறிவழகன் இயக்கத்தில் 'சப்தம்' படத்தில் ஆதி, சிம்ரன் மற்றும் லைலாவுடன் இணைந்து நடித்துள்ளார்.



## ஹாரி பாட்டர் பட டைரக்டரை சந்தித்த கமல்




கமல்ஹாசன் புகழ்பெற்ற இயக்குநர் அல்போன்ஸோ குரானை சந்தித்து பேசிய புகைப்படம் வைரலாகி வருகிறது

ஷங்கர் இயக்கத்தில் கமல் நடித்துள்ள இந்தியன் 2 படம் வரும் ஜூன் மாதம் வெளியாகும் என படக்குழு சமீபத்தில் தெரிவித்தது. இந்தியன் 2 படத்தில் நாயகிகளாக காஜல் அகர்வால் , ரகுல் ப்ரீத் , பிரியா பவானி சங்கர் நடித்துள்ளார்கள் . சித்தார்த் , எஸ்.ஜே சூர்யா , பாபி சிம்ஹா உள்ளிட்ட பிற நடிகர்கள் இப்படத்தில் வில்லனாக நடித்துள்ளார்கள். அனிருத் இசையமைத்திருக்கும் இப்படத்தை லைகா தயாரித்துள்ளது. தேர்தலுக்குப் பிறகு மணிரத்னம் இயக்கும் தக் லைப் படத்தில் நடிக்க இருக்கிறார் கமல். கமல்ஹாசனை உலகநாயகன் என்று ரசிகர்கள் அழைப்பதற்குகாரணம்தமிழில்அல்லதுஇந்தியாவில்மட்டுமில்லாமல் உலக அளவில் திரைத்துறையினரால் மாஸ்டர் என்று அங்கீகரிக்கப் படக் கூடியவர் அவர் என்பதே. காட்பாதர் படத்தில் மார்லன் பிராண்டோவைப் போல் அவர் நிகழ்ச்சி ஒன்றில் நடித்து காட்டி கமல் நம்மை ஆச்சரியப்படுத்தினார். சினிமாத் தொடர்பான உரையாடல்களில் கமல் தொடர்ச்சியாக பங்கேற்று வருகிறார். உலகம் முழுவதிலும் இருக்கும் நடிகர்கள் இயக்குநர்கள் , தொழில் நுட்ப கலைஞர்களுடம் கலந்துபேசி பிற திரைத்துறையில் சினிமா எந்த கட்டத்தில் இருக்கிறது என்பதை தனக்கு அப்டேட் செய்துகொண்டே இருக்கிறார்.

ஹாலிவுட் இயக்குநர் கிறிஸ்டோபர் நோலனை கமல் சந்தித்து ஹே ராம் படத்தின் டிஜிட்டல் வடிவத்தை கொடுத்தது குறிப்பிடத் தக்கது. அதேபோல் தற்போது புகழ்பெற்ற மெக்ஸிக்கன் இயக்குநர் அல்போன்ஸ் குரானை சந்தித்து பேசியுள்ளார் கமல்ஹாசன். கிராவிட்டி, ரோமா மற்றும் ஹாரி பாட்டரின் மூன்றாவது பாகம் உள்ளிட்ட புகழ்பெற்ற படங்களை இயக்கியவர் அல்போன்ஸோ குரான். இவர் இயக்கிய ரோமா படம் கடந்த 2019ம் ஆண்டு ஆஸ்கர் விருதை வென்றது. அல்போன்ஸ் குரான் மற்றும் கமல் சந்தித்து பேசியபோது எடுக்கப் பட்ட புகைப்படம் தற்போது சமூக வலைதளத்தில் வைரலாகி வருகிறது. இந்தியா வந்திருந்தபோது ராஜ்கமல் பிலிம்ஸ் அலுவலகத்தில் அவர் கமலை சந்தித்ததாக கூறப்படுகிறது.

## நடிகர் விஜய் குரலில் ... 'கோட்' படத்தின் முதல் பாடல் தமிழ் புத்தாண்டையொட்டி வெளியீடு




படத்தைத் தொடர்ந்து விஜய்யின் 68வது படத்தை வெங்கட் பிரபு இயக்கி வருகிறார். நடிகர் விஜய், வெங்கட் பிரபு இயக்கும் 'தி கிரேட்டஸ்ட் ஆப் ஆல் டைம்' (கோட்) படத்தில் நடித்து வருகிறார். இந்தப் படத்தில் பிரசாந்த், மோகன், பிரபுதேவா, ஜெயராம், கணேஷ், யோகிபாபு, அஜ்மல் அமீர், சினேகா, லைலா, மீனாட்சி சவுத்ரி ஆகியோர் நடிக்கின்றனர். யுவன் சங்கர் ராஜா இசை அமைக்கும் இந்தப்படத்தில் விஜய் இரண்டு வேடங்களில் நடிக்கிறார். புதுச்சேரி, கேரளத்தில் படத்தின் படப்பிடிப்பு நிகழ்ந்தபோது தன் ரசிகர்களை விஜய் சந்தித்து எடுத்துக்கொண்ட வீடியோ இணையத்தில் வைரலானது. தற்போது வெளிநாட்டில் படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது. சமீபத்தில் இதன் புதிய போஸ்டர் வெளியாகியது. அதில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு செப்டம்பர் 5ம் தேதி இந்தப் படம் திரையரங்குகளில் வெளியாகுமென படக்குழு அறிவித்துள்ளது. .இந்நிலையில் முதல் பாடலுக்கு தயாரா என படக்குழு போஸ்டரை வெளியிட்டுள்ளது. இயக்குநர் வெங்கட் பிரபு தனது எக்ஸ் பக்கத்தில். "நாளை சம்பவம் உறுதி" எனக் குறிப்பிட்டுள்ளார். அதனால் முதல்பாடல் நாளை வெளியாகுமென எதிர்பார்க்கப்பட்ட நிலையில் படத்தின் தயாரிப்பாளர் தனது டுவிட்டர் பதிவில் நாளை மாலை கோட் படத்தின் முதல் பாடல் வெளியாகுமென தெரிவித்துள்ளார்.

## ஏஐ தொழில்நுட்பத்தை பயன்படுத்தி 20 வயது இளமை ஜாக்கி சானை அறிமுகப்படுத்தி ஆச்சரியப்பட வைத்திருக்கிறது 'தி லெஜெண்ட்' படக்குழு.

சமீபத்தில் நடிகர் ஜாக்கி சானின் 70 வயது தோற்றத்தைப் பார்த்து ரசிகர்கள் அதிர்ச்சி அடைந்தனர். 'ஜாக்கி சானுக்கு வயசாகிருச்சா... எனக் கண்ணீர் விடாத குறையாக கவலைப்பட்டனர். தனது அன்பான ரசிகர்களுக்காக 20 வயது ஜாக்கி சானை களமிறக்கி இருக்கிறது படக்குழு. சிறுவயதில் இருந்து தாங்கள் பார்த்து ரசித்த நாயகனுக்கு வயதாகி விட்டது என்பதைப் ரசிகர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அதிலும் மொழி கடந்து சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை எல்லோருக்கும்பிடித்தஆக்ஷன்நாயகன்ஜாக்கிசான்.சண்டைமட்டும்போடாமல்சீரியஸ்சண்டையிலும்நகைச்சுவையைச் சேர்த்து ஆக்ஷன் காட்சிகளையும் ரசிக்க வைத்தவர். அப்படியானவரின் வயதான தோற்றம் கொண்ட புகைப்படம் ஒன்று இணையத்தில் வைரலானது. இதைப் பார்த்தப் பலரும் 'ஜாக்கி சானுக்கு வயசாகிருச்சா...?' எனக் கண்ணீர் விடாத குறையாக புலம்பித் தள்ளினர். பின்பு, அது படத்திற்காகப் போடப்பட்ட கெட்டப் என்றும் ரசிகர்கள் கவலைப்பட வேண்டாம் என்றும் ஆறுதல் படுத்தினார் ஜாக்கி. இருந்தாலும் அவருக்கு 70 வயதாகி விட்டது என்பது மறுக்க முடியாத உண்மை. இந்நிலையில், தனது 20 வயது இளமை ஜாக்கி சானை அறிமுகப்படுத்தி ஆச்சரியப்பட வைத்திருக்கிறார் ஜாக்கி. கடந்த 2005ம் ஆண்டு 'தி மித்' என்ற படத்தில் நடித்தார் ஜாக்கி. அதன் இரண்டாம் பாகம் 'தி லெஜென்ட்' என்ற பெயரில் இப்போது உருவாகி வருகிறது. இதற்காகதான் தனது 20 வயது ஜாக்கி சானை களம் இறக்கி இருக்கிறார்கள். இது டூப்போ அல்லது டீஏஜிங் தொழில்நுட்பமோ கிடையாது என்பதுதான் இன்னொரு ஆச்சரியம். ஏஐ தொழில்நுட்பத்தை இதற்காகப் பயன்படுத்தி இருக்கிறார்கள். இதில் இளமையான போர்வீரன் மற்றும் தற்போதைய தோற்றத்தில் ஆராய்ச்சியாளர் என இரட்டை வேடத்தில் நடிக்கிறார் ஜாக்கி. ஏஐ ஜாக்கி சிறப்பாக வந்திருப்பதாகவும் ரசிகர்களுக்கும் இது பிடிக்கும் எனவும் படக்குழு உற்சாகம் தெரிவித்துள்ளது.

## இளம் விக்கெட் கீப்பர் டோனியின் ஹாட்ரிக் சிக்ஸ் மிகப்பெரிய அளவில் உதவியது: ருதுராஜ் கெய்க்வாட்



மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ்அணி 20ரன்வித்தியாசத்தில்மும்பையை வீழ்த்தியது.

மும்பை இந்தியன்ஸ் அணியை 20 ரன் வித்தியாசத்தில்வீழ்த்தியமகிழ்ச்சியில்ருதுராஜ் கெய்க்வாட் கூறியதாவது:

இளம் விக்கெட் கீப்பரான டோனியின் அந்த கடைசி ஓவரின் ஹாட்ரிக் சிக்ஸ் எங்களுக்கு மிகப்பெரிய அளவில் உதவியது. அது வித்தியாசம் என்பதை நிரூபித்தது. இதுபோன்ற மைதானத்தில் எங்களுக்கு 10 முதல் 15 ரன்கள் கூடுதலாக தேவைப்பட்டது. நாங்கள் பேட்டிங் செய்தபோது மிடில் ஓவர்களில் பும்ரா சிறப்பாக பந்து வீசினார்.

மும்பை இந்தியன்ஸ் அணியின் பேட்டிங் சிறப்பாக இருந்த போதிலும், நாங்கள் எங்கள் பந்து வீச்சின் திட்டத்தை வெளிப்படுத்தியது சிறந்ததாக இருந்து என நினைக்கிறேன். நாங்கள் பவர்பிளேயில் 60 ரன்கள் எடுத்திருக்கனும். எங்களுடைய மலிங்காவின் பந்து வீச்சு மிகவும் சிறப்பாக இருந்தது. தேஷ்பாண்டே, ஷர்துல் தாகூர் ஆகியோரும் சிறப்பாக பந்து வீசினார்கள் என்பதை மறந்து விடக்கூடாது.

ரகானேவுக்கு சிறிய அளவில் காயம் இருந்ததால் தொடங்க வீரராக களம் இறக்கினால் சிறப்பானதாக இருக்கும் என நினைத்தோம். எந்த இடத்தில் களம் இறங்கினாலும் எனக்கு சரியானதுதான். அது ஒரு கேப்டனாக கூடுதலாக பொறுப்பு.

இவ்வாறு ஹர்திக் பாண்ட்யா தெரிவித்துள்ளார்.

முதலில் விளையாடிய சென்னை சூப்பர் கிங்ஸ் 206 ரன்கள் குவித்தது. ருதுராஜ் கெய்க்வாட், ஷிவம் டுபே அரைசதம் அடித்தனர். டோனி கடைசி ஓவரில் ஹாட்ரிக் சிக்ஸ் விளாசினார். மும்பை இந்தியன்ஸ் அணி சார்பில் ரோகித் சர்மா சதம் அடித்திருந்தார். பதிரான நான்கு விக்கெட்டுகள் வீழ்த்தி ஆட்ட நாயகன் விருது வென்றார்.

## பதிரனா பந்து வீச வரும்வரை ஆட்டம் எங்கள் கையில்தான் இருந்தது: ஹர்திக் பாண்ட்யா

மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 20 ரன் வித்தியாசத்தில் மும்பையை வீழ்த்தியது.

சென்னையிடம் தோல்வியடைந்த பிறகு மும்பை இந்தியன்ஸ் அணி கேப்டன் ஹர்திக் பாண்ட்யா கூறியதாவது:

207 இலக்கு என்பது எட்டக்கூடியதுதான். ஆனால் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி பந்து வீச்சாளர்கள் சிறப்பாக பந்து வீசினர். திட்டத்திலும் அணுமுறையிலும் ஸ்மார்ட்டாக இருந்தனர். தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை ஸ்டம்பிற்கு பின்னால் இன்று சொல்லிக்கொடுக்கும் டோனி என்ற நபரை அவர்கள் பெற்றிருந்தனர். அது அவர்களுக்கு உதவியாக இருந்தது.

பதிரனா பந்து வீசி இரண்டு விக்கெட்டுகளை ஒரே ஓவரில் வீழ்த்துவதற்கு முன்பு வரை நாங்கள் நல்ல நிலையில்தான் இருந்தோம். அடுத்த நான்கு போட்டிகளை எதிர்நோக்கி இருக்கிறோம். அதை சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவது அவசியம். தீவிரம் அதிகமாக இருக்க வேண்டியது அவசியம்.

இவ்வாறு ஹர்திக் பாண்ட்யா தெரிவித்துள்ளார்.

முதலில் விளையாடிய சென்னை சூப்பர் கிங்ஸ் 206 ரன்கள் குவித்தது. ருதுராஜ் கெய்க்வாட், ஷிவம் டுபே அரைசதம் அடித்தனர். டோனி கடைசி ஓவரில் ஹாட்ரிக் சிக்ஸ் விளாசினார். மும்பை இந்தியன்ஸ் அணி சார்பில் ரோகித் சர்மா சதம் அடித்திருந்தார். பதிரான நான்கு விக்கெட்டுகள் வீழ்த்தி ஆட்ட நாயகன் விருது வென்றார்.





## ஜெயசூர்யாவுக்குப் பிறகு... சிஎஸ்கேவுக்கு எதிராக ரோகித் சர்மாவின் அரிய சாதனை



மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று மும்பை இந்தியன்ஸ் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

முதலில் விளையாடிய சென்னைசூப்பர்கிங்ஸ்அணி 206ரன்கள்குவித்தது. பின்னர் 207ரன்கள்அடித்தால்வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மும்பை இந்தியன்ஸ் அணியால் 186 ரன்கள் மட்டுமே அடிக்க முடிந்தது.


அந்த அணியின் தொடக்க வீரர் ரோகித் சர்மா சதம் அடித்தும் அணியை வெற்றி பெற வைக்க முடியாமல் ஏமாற்றம் அடைந்தார். அவர் 63 பந்துகளில் 11 பவுண்டரி, ஐந்து சிக்ஸ் உடன் 105 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

சிஎஸ்கே மும்பை இந்தியன்ஸ் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் எப்போதும் மிகப்பெரிய ஆட்டமாக பார்க்கப்படும். இதில் யார் சிறப்பாக விளையாடுகிறார்கள் என்பது குறித்து ரசிகர்கள் அறிய ஆவலாக இருப்பார்கள்.

இரு அணிகளுக்கு இடையில் ஐபிஎல் தொடங்கிய முதல் வருடமான 2008ல் மும்பை இந்தியன்ஸ் அணியின் சார்பில் சனத் ஜெயசூர்யா சதம் அடித்திருந்தார்.

அதற்குப் பிறகு சுமார் 16 வருடங்கள் கழித்து ரோகித் சர்மா தற்போது சதம் அடித்துள்ளார். சிஎஸ்கே அணிக்கு எதிராக சதம் அடித்த இரண்டாவது மும்பை இந்தியன்ஸ் வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

இந்த போட்டியில் பதிரனா 4 விக்கெட் வீழ்த்தி சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமாக இருந்தார். இதனால் ஆட்ட நாயகன் விருதை தட்டிச் சென்றார். டோனி 4 பந்தில் 3 சிக்சருடன் 20 ரன்கள் விளாசினார் என்பது குறிப்பிடத்தக்கது.



**ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்**
**எழுமையும் ஏமாப் புடைத்து**

**விளக்கம்:**

**ஒரு பிறப்பில், ஆமைபோல் ஐம்பொறிகளையும் அடக்கியாள வல்லவனானால், அஃது அவனுக்குப் பல பிறப்பிலும் காப்பாகும் சிறப்பு உடையது.**

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.